தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | **:** | **251/2019** | சாட்சியம் | **:** | **WW2** |
| **Name** | **:** | திரு. **Sasi Kumar** | | | |
| **Date** | **:** | **18.10.2024** | | | |
| **Time** | **:** | **11.08 a.m to 11.29 a.m** | | | |

தொ.த.சா.**2** திரு. **Sasi Kumar** என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை

செப்டம்பர் 2009 ல் என்னை டிப்ளமோ ட்ரெயினியாக பணியில் அமர்த்தினார்கள் என்றால் ஆமாம். டிசம்பர்-2010 ல் என்னை டிப்ளமோ இன்ஜினியர் டிரைனிங் ஆக உயர்த்தினார்கள் என்றால் இல்லை. ட்ரெய்னியாகவே ஒரு வருடம் காலம் நீட்டிப்பு செய்தார்கள். டிசம்பர் 2012 ல் என்னை ஆப்ரேட்டிங் இன்ஜினியராக பணியில் அமர்த்தினார்கள் என்றால் ஆமாம். எதிர்மனுதாரர் நிறுவனம் பன்னாட்டு நிறுவனம் என்றால் ஆமாம். வருடா வருடம் என்னுடைய பணி திறன் ஆய்வு செய்யப்பட்டு அதற்கு ஏற்றார் போல் ஊதிய உயர்வு வழங்கப்படுமா என்றால் எனக்கு மட்டுமல்ல என்னை போன்று எல்லா ஆப்ரேட்டர்களுக்கும் பணி திறனாய்வு அடிப்படையில் தான் வழங்கப்படும். ஆப்ரேட்டர்களுக்கு என்று தனி தொழிற்சங்கம் உள்ளது என்றால் ஆமாம். அந்த தொழிற்சங்கம் நிர்வாகத்துடன் ஒப்பந்தம் ஏற்படுத்தி கையொப்பம் இட்டுள்ளார்கள் என்றால் ஆமாம். அந்த ஒப்பந்தம் அடிப்படையில் தான் ஆப்ரேட்டர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டு வந்தது என்றால் ஒப்பந்தமானது 2015 ஆம் ஆண்டு ஏற்பட்டு மாதம் ஒன்றுக்கு 1800 ரூபாய் கூடுதலாக கொடுக்க

ஒப்புக்கொள்ளப்பட்டது அதன் பின்னிட்டு உள்ள வருடங்களுக்கு ஒப்பந்தம் ஏற்படுத்த நிர்வாகம் முன் வரவில்லை. அதன் பின்னர் ஆப்ரேட்டர் சங்கம் ஆனது நிர்வாகத்துடன் ஒப்பந்தம் எதுவும் போட்டதா என்றால் போட்டது ஆனால் அந்த ஒப்பந்தம் முன்னிலைக்கு எனக்கும் கூடுதலாக ஊதியம் தர வேண்டும் என நான் கோரிக்கை வைத்துள்ளேன். ஆப்பரேட்டர் தொழிற்சங்கம் நிர்வாகத்துடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தம் முன்னிலைக்கு எனக்கு ஊதியம் வழங்கப்படவில்லை என்றால் ஆமாம். 2014 இல் எனக்கு டீம் லீடராக பதவி உயர்வு வழங்கப்பட்டது என்றால் தற்காலிகமாக டீம் லீடர் பதவி கொடுக்கப்படுவதாகவும் அந்த பதவிக்கான Allowance மட்டுமே வழங்கப்படும் என்றும் சொல்லி எழுத்து மூலமாக உத்தரவு வழங்கினார்கள். டீம் லீடர் கான Allowance மாதம் தோறும் 5000 எனக்கு வழங்கப்பட்டு வருகிறது என்றால் ஆமாம். எனக்கு டீம் லீடர் கான ரிட்டன்ஷன் Bonus வருடத்திற்கு 20,000 வழங்கப்படுகிறது என்றால் ஒரு வருடம் மட்டும் கொடுத்தார்கள் அதன் பிறகு கொடுக்கவில்லை. தொ.சா.ஆ.27 முன்னிலைக்கு எனக்கு வழங்கப்பட்ட நியமன உத்தரவு எங்கு வேண்டுமானாலும் பணியிட மாற்றம் செய்யப்படும் என சொல்லி தான் வழங்கப்பட்டது என்றால் ஆமாம். தொ.சா.ஆ.28, 30 ஆகிய உத்தரவுகளிலும் எங்கு வேண்டுமானாலும் பணியிட மாற்றம் செய்யப்படும் என சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். எதிர் மனுதாரர் நிறுவனத்தில் வேலை செய்யும் ஆப்ரேட்டர்கள் எல்லாம் ஐ.டி.ஐ முடித்திருக்கிறார்கள் என்றால் டிப்ளமோ முடித்தவர்களும் உள்ளார்கள். டீம் லீடர் தவிர அனைத்து ஆப்ரேட்டர்களும் ஐ.டி.ஐ தான் படித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. தற்சமயம் இந்த வழக்கை மொத்தம் 24 தொழிலாளர்கள் நடத்தி வருகிறார்கள். 24 தொழிலாளர்களுக்கும் வருடம் தோறும் திறன் ஆய்வு

செய்யப்பட்டடு தான் ஊதிய உயர்வு வழங்கப்படுகிறது என்றால் இல்லை. எதிர் உரையில் உள்ள விவரங்கள் தெரியாது. 2014 இல் என்னை டீம் லீடராக பணி அமர்த்தியதில் இருந்து நான் அந்த வேலையை தான் செய்து வருகிறேன் என்றால் இல்லை. போர்ஜிங் மெஷின் ஆப்ரேட்டர் ஆக தான் வேலை பார்த்து வருகிறேன். எதிர்மனுதாரர் நிர்வாகம் தற்காலிக ஊழியர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் என்ற நிலையில் வைத்து நேரடி உற்பத்தி பிரிவில் தொழிலாளர்களை ஈடுபடுத்தி வருகிறது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது

Typed to my dictation, read over to
interpreted to the witness and
acknowledged by him to be correct.

Sd/-S.Sujatha,
Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:18.10.2024